<u>கொடைக்கானல் நகராட்சி</u>

2020ம் ஆண்டு மே மாதம் 20ஆம் நாள் (20.05.2020) புதன்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

முன்னிலை: த. நாராயணன், பி.எஸ்.சி., எம்.பி.ஏ.,
தனி அலுவலர்.

1) கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் வீடு வீடாக குப்பை பிரித்து வாங்கும் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் தள்ளுவண்டிகள் 35 எண்ணம் உடைந்தும், சக்கரங்கள் தேய்ந்தும் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இதனால் குப்பைகளை வீடு வீடாக சென்று தரம் பிரித்து வாங்குவதில் சுணக்கம் ஏற்படுகிறது. எனவே, துப்புரவு பணியினை சுணக்கம் இன்றி மேற்கொள்வதற்கு ஏதுவாக 35 தள்ளுவண்டிகளை பழுது நீக்கம் செய்து புதிய சக்கரங்கள் பொருத்திடவும் அதற்கான செலவினத்தினை பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 7.00 இலட்சம் ஆகும்.

அலுவலக குறிப்பு: பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணியினை கருத்தில் கொண்டு மேற்கண்ட பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **819, நாள். 20.05.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

2) கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணியினை முன்னிட்டு நகர் பகுதிகளில் கிருமி நாசினி செய்வதற்கு கீழ்க்கண்ட பொருட்கள் தேவையாக உள்ளது.

| வ.எண். | பொருட்களின் விபரம் | அளவு (டன்) |
|---|---|---|
| 1 | பிளிச்சிங பவுடர் | 10 டன் |
| 2 | நீர்த்த சுண்ணாம்பு துாள் | 20 டன் |
| 3 | Mask Three Ply | 20000 எண்ணம் |
| 4 | கையுறை Disposable | 20000 எண்ணம் (200 பாக்ஸ்) |

எனவே மேற்கண்ட பொருட்கள் இருப்பு குறைவாக உள்ளதாலும், கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகளை நகர் பகுதியில் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், அரசு கூட்டுறவு நிறுவனமான திண்டுக்கல் மாவட்ட அச்சக சேவைத் தொழிற் கூட்டுறவு சங்கம் லிட்., 16ஏ, எஸ்.ஆர். மில்ஸ் ரோடு, திண்டுக்கல்லில் வாங்கிக் கொள்ளவும், அதற்கான செலவுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 12.70 இலட்சம் ஆகும்.

அலுவலக குறிப்பு : 1. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் மூன்றாம் கட்டமாக விடுவிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தடுப்பு நிதியின் மூலம் மேற்கொள்ளவும், கூடுதல் நிதியினை நகராட்சியின் பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **820, நாள். 20.05.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

3) கொடைக்கானல் நகராட்சி பகுதியில் பொது நிதியின்கீழ் பணிகள் மேற்கொள்வதற்கு 8.5.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | நகராட்சி பொறியாளர் குடியிருப்பு மேம்பாட்டு பணிகள் | 9.70 | பி. முரளி<br>எம்.ஆர்.பிலால்இப்ராஉறிம் | 0.06% குறைவு<br>10.28% அதிகம் |
| 2 | நகரமைப்பு அலுவலர், சுகாதார ஆய்வாளர் மற்றும் இளநிலை பொறியாளர் குடியிருப்பு மேம்பாட்டு பணி | 9.80 | பி. முரளி<br>எம்.ஆர்.பிலால் இப்ராஉறிம் | 0.01% குறைவு<br>0.63% அதிகம் |
| 3 | ஆணையாளர் குடியிருப்பு மேம்பாட்டு பணி | 9.98 | எஸ்.இ. முகமது ரசூல்<br>எம்.ஆர்.பிலால் இப்ராஉறிம் | 0.07% குறைவு<br>1.73% அதிகம் |
| 4 | அம்மா உணவகம் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 9.86 | ஜி. ஸ்ரீதர்<br>எம்.ஆர்.பிலால் இப்ராஉறிம் | 0.23% குறைவு<br>1.08% அதிகம் |

அலுவலக குறிப்பு.

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **821, நாள். 20.05.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

4) கொடைக்கானல் நகராட்சி பகுதியில் குடிநீர் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்வதற்கு 8.5.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | லிவின்ஞ்ச் டேங்க் முதல் வி.ஜி.பி. பகுதி வரை குடிநீர் பகிர்மான குழாய்கள் பதித்தல் | 4.11 | எம். கென்னடி<br>பி. சுப்பிரமணி | 0.05% குறைவு<br>0.32% அதிகம் |
| 2 | வட்டகானல் பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய்கள் பதித்தல் | 1.87 | எம். கென்னடி<br>பி. சுப்பிரமணி | 0.08% குறைவு<br>1.10% அதிகம் |
| 3 | அன்னை தெரசா நகர் , அந்தோணியார் கோயில் தெரு, தந்திமேடு பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய்கள் பதித்தல் | 3.76 | எம். கென்னடி<br>பி. சுப்பிரமணி | 0.73% குறைவு<br>0.64% அதிகம் |
| 4 | ஆனந்தகிரி 4வது தெரு முதல் இந்திரா நகர் வரை குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைத்தல் | 6.10 | எம். கென்னடி<br>பி. சுப்பிரமணி | 0.32% குறைவு<br>0.23% அதிகம் |

அலுவலக குறிப்பு.

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **822, நாள். 20.05.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

5) கொடைக்கானல் நகராட்சியின் புதிய பொலிரோ வாகனம் TN 57 BU 9623 இதுவரை 25,000 கி.மீட்டருக்கு மேல் ஓடியுள்ளது. எனவே, இவ்வாகனத்தின் ஆயில் சர்வீஸ் மற்றும் இதர மராமத்து சர்வீஸ் பணிகளை வாகனத்தின் உற்பத்தி நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற மதுரை, கப்பலூர், AMPL பணிமனையில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 21,000/– (ரூபாய் இருபத்து ஓராயிரம் மட்டும்) ஆகும்.

அலுவலக குறிப்பு. 1) அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(கோப்பு ந.க.எண். 3564/2018/இ1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **823, நாள். 20.05.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

6) கொடைக்கானல் நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே வார்டு.B, பிளாக் எண்.30, நகரளவு எண்.3, புல எண்.234ல் உள்ள நகராட்சிக்கு சொந்தமான ஏரியில் படகுகள் இயக்குவது குறித்து விதிமுறைகளை ஏற்படுத்திட அரசாணை எண்.105, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.6.2009ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 1920ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 306 (9) ன் கீழ் கொடைக்கானல் ஏரியில் படகு இயக்குவதற்கான வரைவு துணை விதிகள் தயார் செய்யப்பட்டு, கடந்த 6.01.2020ம் தேதியன்று அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. மேற்படி ஆய்வுக் கூட்டத்தில் பெறப்பட்ட அறிவுரைகளின் அடிப்படையில், தற்போது கொடைக்கானல் ஏரி படகு விதிகள் தயார் செய்து வரைவு இணைக்கப்பட்டுள்ளது.

துணை படகு விதிகளை கொடைக்கானல் நகராட்சி பகுதியில் அரசின் அனுமதி பெற்று நடைமுறைப்படுத்திட, மன்றம் ஒப்புதல் வழங்கும் பொருட்டு மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2) கொடைக்கானல் ஏரி படகு துணை விதியினை அரசின் அனுமதி பெறும் பொருட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசிற்கு பிரேரணை அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **824, நாள். 20.05.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

7) உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, திண்டுக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண்.471/2019/அ1, நாள்.31.01.2020ன்படி, வரப்பெற்றுள்ள 2018–19ம் ஆண்டு வருவாய் மற்றும் மூலதன நிதி தணிக்கை அறிக்கை பத்தி எண்.76ல் குறிப்பிட்டுள்ளபடி, அரசாணை எண்.62, உள்ளாட்சி துறை, நாள்.12.01.1994ன்படி 2018–19ம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் மூலதனநிதி, குடிநீர் வழங்கல் நிதி மற்றும் கல்வி நிதிக்கான தணிக்கை கட்டணம் ரூ.1,70,027/– (ரூபாய் ஒரு இலட்சத்து எழுபத்தாயிரத்து இருபத்தேழு மட்டும்) அரசு தலைப்பில் செலுத்த கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி விபரத்திற்கு 2018–19ம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் ரூ.1,70,027/–ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.580/2006/C3)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **825, நாள். 20.05.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

8) அரசாணை (நிலை) எண்.166, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 23.11.2016ன்படி, நகர்புற உள்ளாட்சி அமைப்பு எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ளஅரசு மற்றும் உள்ளாட்சி அமைப்பு பள்ளிகளில் உள்ள கழிப்பறைகளை தனியார் வசம் ஒப்படைத்து தூய்மையாக பராமரிக்கவும் அதற்கான செலவினத்தை கல்வி நிதியிலிருந்து செலவிடவும் வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது. இதன்பேரில் கொடைக்கானல் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளிலுள்ள கழிப்பறை வளாகப் பகுதிகளை தூய்மையாக பராமரிக்க வேண்டி நகர்மன்றத் தீர்மானம் எண்.634, நாள்.31.03.2019ன்படி ஏற்றுக் கொள்ளப்பட்டு இவ்வலுவலக ந.க.எண்.2631/2016/எச்.1, நாள்.01.08.2019ன்படி திரு.P.சுரேஷ் குமார் மதுரை ஒப்பந்ததாரருக்கு ஓராண்டு காலத்திற்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு 31.03.2020ல் முடிவடைந்துள்ளது. மேலும், ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்தத்தினை நீட்டித்து வழங்குமாறு திரு.P.சுரேஷ் குமார் என்பவர் கடிதம் கொடுத்துள்ளார்.

இந்நகராட்சியின் நகர்நல அலுவலரின் 14.05.2020ம் நாளிட்ட குறிப்பின்படி நகராட்சி மற்றும் அரசு பள்ளிகளின் துப்புரவுப் பணிகள் மேற்கொள்வது குறித்து தற்போது கொரோனா வைரஸ் தொற்று நோய் உலகமெங்கும் பரவி உள்ளதால் இப்பணிக்கான புதிய மதிப்பீடு தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள இயலாத கால சூழ்நிலை உள்ளது.

மேலும், தற்போது 10ஆம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு அரசு பொதுத் தேர்வு நடத்தப்பட உள்ளதால் பொது சுகாதாரம் அவசரம் அவசியம் நலன் கருதி ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் அதே எண்ணிக்கையிலான 12 தூய்மை பணியாளர்கள் மற்றும் ஒரு துப்புரவு மேற்பார்வையாளர்களுக்கு அதே ஊதிய விகிதத்தில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு கூலி தொகை ரூ.376.62/– வீதம் 13 பணியாளர்களுக்கு 365 நாட்களுக்கு ஊதியத்திற்கான மொத்த செலவுத் தொகை ரூ.17,87,062/– ஆரம்ப கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டியுள்ளது.

தற்போது அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளின் பொது சுகாதாரம் நலன் கருதி பள்ளிகளின் பராமரிப்பு பணிக்காக ஒப்பந்தத்தினை வரும் 01.06.2020 முதல் 31.05.2021 வரை ஏற்கனவே உள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு மேலும் ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்ததாரர் திரு.P.சுரேஷ் குமார், மதுரை என்பவர் மூலம் பள்ளி பராமரிப்பு பணிக்கான ஒப்பந்தத்தினை நீட்டிப்பு செய்து கொடுப்பதற்கும், அதற்கு உரிய செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளின் பொது சுகாதார நலன் கருதி பள்ளி பராமரிப்பு செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2631/2016/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **826, நாள். 20.05.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

ஒம்/–த.நாராயணன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.